DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.31/2021

**prosecution witness: LW-5 as PW-1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியா | தொழில்/ பதவி | : தலைமைக் காவலர், |
| த/பெ. | : கார்மேகம் | வயது | : 35 |
| ஊர் | : இராமநாதபுரம் | சமயம் | : இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**23.06.2026**

( 1, 2 ம் எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது பெண் தலைமைக்காவலராக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடநத 14.04.2020ம் தேதி 13.15 மணிக்கு மண்டபம் காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது மண்டபம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் நிலைய குற்ற எண் 70/2020 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச வழக்கில் 2வது எதிரி காளீஸ்வரி என்பவரை தேடி வந்த நிலையில் மண்டபம் மைக்கூண்டு இரயில்வே கேட் பகுதியில் சார்பு ஆய்வாளருடன் ரோந்து சென்று கண்காணித்து வரும்போது அங்கு நின்றிருந்த 2வது எதிரியை காரணம் கூறி சார்பு ஆய்வாளர் கைது செய்து 13.30 மணிக்கு திரேகப்பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைக்க சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆஜர் 2ம் எதிரிதான் காளீஸ்வரி ஆவார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 2ம் எதிரியை சம்பவம் நடந்து 1 மாதம் கழித்துதான் கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். 2ம் எதிரியை தேடிவந்த நிலையில் யாரும் துப்பு கொடுத்து கைது செய்தீர்கள் என்றால் நாங்களே தான் ரோந்து செல்லும்போது கைது செய்தோம். நாங்கள் ரோந்து செல்லும்போது காவல் நிலையத்தில் உள்ள டைரியில் பதிந்துதான் சென்றோம் என்றால் சரிதான். அன்றைய தினமும் அவ்வாறு தான் பதிவு செய்த பின்னர் ரோந்து சென்றோம்

என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியை சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் கைது செய்து ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது உயர் அதிகாரி சார்பு ஆய்வாளர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2026.06.23 14:38:59 +0530